1974 மார்ச் 27]

பர்வதராஜகுல மீனவர்கள்

*631 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

"பருதவராஜகுல மீனவர்களை" தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: உறுப்பினர் பர்வதராஜ குலத்தைத்தான் 'பருதவராஜ குலம்' என்று குறிப்பிடுகிறார் என்று கருதப்படுகின்றது. பர்வத ராஜகுல மீனவர்களை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, தாழ்த்தப் பட்டவர்களின் பட்டியலிலே சேர்க்க வேண்டும் சேர்க்க வேண்டும் என்று எல்லா வகுப்பைச் சேர்ந்தவர்களுமே கூறிக்கொண்டிருக் கிறார்கள். ஏதாவது ஒரு சலுகையைப் பெறுவதற்காகத்தான் பேக்வேர்ட் லிஸ்டிலே சேர்க்க வேண்டுமென்று ஒவ்வொரு வகுப்பினரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒரு மாற்றுத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் யோசித்து, ஏதாவது சலுகை பெற வேண்டுமென்றால் வருமான அடிப்படையை உண்டாக்கி அதன் மூலம் இதற்கு முடிவுகட்டி, இந்த பேக்வேர்ட், ஃபார்வேர்ட் என்ற முடிவை அரசாங்கம் கொள்கையளவில் எடுத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, அதற்காகத்தான் சமுதாயத்திலே, பொருளாதாரத்தில் பின்தங்கியிருப்பவர்களை பின்தங்கியவர்கள் என்ற ஒரு நிலையை உருவாக்கி பின்தங்கியவர்கள் பட்டியலில் பலர் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் என்பது தீண்டாமை என்ற கொடுமைக்கு ஆளாக்கப்படும் சமுதாயம் எதுவோ அதுதான் சேர்க்கப்பட வேண்டுமென்று மத்திய அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, பர்வதராஜ குல மீனவர்களைப் பின்தங்கியவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று மாநில பிற்பட்டோர் நல கருத்தரங்கில் ஒரு

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, மீண்டும் அதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இப்பொழுதும் அவர்கள் மிகவும் பின் தங்கிய சமுதாயம் என்ற பட்டியலில்தான் இருக்கிறார்கள். ஆனால் அவர்களது கோரிக்கை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்பது. பின்தங்கிய வகுப்பினர் நல ஆணைக்குழு அதைப்பற்றி ஆராய்ந்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மத்திய அரசை ஒப்புக்கொள்ளச் செய்வது மிகவும் கடினம் என்று தெரிவித்துள்ளது. இதுதான் இப்பொழுது உள்ள நிலைமை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, 'பர்வதராஜ குலம்' என்பதில் ராஜகுலம் என்ற பெயர் இருந்தாலும் அவர்கள் பொருளாதாரத்தில் முன்னிலையில் இல்லை. அவர்கள் தாழ்த்தப் பட்டவர்களை விட மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, நான் முதல் கேள்விக்கே பதில் சொன்னேன். மிகவும் பின் தங்கிய சமுதாயம் என்று சில சமுதாயங்களை மாநில அரசு ஏற்படுத்தி அவர்களுக்கு மேலும் பல சலுகைகளைத் தருகிறது. தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் எந்த இனத்தைச் சேர்க்க வேண்டு மென்றாலும் அவர்கள் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட வேண்டும். இதுதான் மத்திய அரசின் உத்தரவு. பர்வதராஜகுல மீனவர்கள் தீண்டாதவர்கள் அல்ல.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இப்பொழுதே தாழ்த்தப்பட்டவர்களோடு மலைஜாதியினரைச் சேர்த்து இந்தச் சலுகைகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த 'பர்வதராஜ குல' மீனவர்கள் என்பதில், பர்வதம் என்ற சொல் இருக்கிறது, பர்வதம் என்றால் மலை என்று பொருள்படும், எனவே இவர்களிடம் மலைஜாதி என்பது சேர்ந்திருப்பதால் இவர்களை மலைஜாதி யினரோடு சேர்ப்பது நியாயம் அல்லவா? அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 27]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, ராஜாங்கமும் சேர்ந்திருக்கிறார்கள், எனவே கொடுக்கக்கூடாது என்றுதான் பலரும் கூற முடியும்.

ராஜேஸ்வர சேதுபதி பாலம்

***632 வினா—திரு. த. சோனையா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வைகை ஆற்றில் உள்ள ராஜேஸ்வர சேதுபதி பாலம் பழுதுபட்டு இருப்பது உண்மையா?

(இ) அந்தப் பாலத்தைப் பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம், பழைய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைத்துறை) மட்டத்தில் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மானாமதுரை வைகையின் குறுக்கே இருக்கும் பாலம் ராஜராஜேஸ்வர சேதுபதி பாலம் என்று அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். அந்தப் பாலம் மிகவும் பழுதடைந்திருப்பதால், அது மட்டுமல்லாமல் அதற்கு அருகில் ஒரு தரைப் பாலமும் இருக்கிறது. அதில் பெரும் பகுதி உடைந்துபோய் சேதப்பட்டிருக்கிறது. எனவே புதிய பாலத்தை கட்டித் தரும் இந்த அரசு அந்த அருகிலே உள்ள தரைப் பாலத்தையும் சேர்த்து அதையும் செப்பனிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஏற்கனவே இருந்து வருகிற பாலம் மிகவும் கீலமாக இருக்கிறது, எடை தாங்கக் கூடியதாக இல்லை என்று புதுப்பிக்க வேண்டுமென்று அரசு யோசித்து ஆராய்ந்து வருகிறது. மதிப்பீட்டில் ஏறக்குறைய 35 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று நம்பப்படுகிறது. அந்த ஆராய்ச்சி முடிந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.